# தேவ ஆளுகை

**உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார் (தானி 4:25).**




இன்று பெரும்பாலான மனிதர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களை குறித்து, ஆளுகைகளை குறித்து பெருமையோடு காணப்படுகின்றனர். மேலும் மேலும் அதிகாரங்களை பெற துடிக்கின்றனர். ஆனால் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் எதற்கு என்பதை அறியாமல், தங்களின் சுயலாபத்திற்காய் அதை பயன்படுத்த துடிக்கின்றனர். இன்னும் சில மனிதர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் மூலம் தேவ இராஜ்யத்தையே எதிர்க்கின்றனர். வேதாகமத்திலும், உலக வரலாற்றிலும் இப்படிப்பட்ட மனிதர்களை நாம் காணலாம். ஆகிலும் மேற்கண்ட **தானி 4:25** வசனம் கூறுகிறபடி உன்னதமான தேவனே ஆளுகை செய்கிறவர் என்பதையும், தம்முடைய சித்தப்படி மனிதர்களுக்கு ஆளுகைகளை கொடுக்கிறார் என்பதையும் நாம் காணலாம். எனவே சரீர பிரகாரமாக நாம் சில மனிதர்களின் ஆளுகைகளின் கீழ் இருந்தாலும், நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய அனைத்தையும் ஆண்டு நடத்துகிறவர் தேவனே என்பதை நாம்

உணர வேண்டும். இதனையே நமது ஆண்டவரும் பின்வரும் யோ 19:10,11 வசனங்களில் கூறியுள்ளார், "அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான். இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்".

பிலாத்துவை போல தனது இராஜ்யத்தை குறித்து மேன்மை பாராட்டின நேபுகாத்நேச்சாரிடம் தேவன், தாமே சகலத்தையும் ஆண்டு நடத்துகிறவர் என்பதை விளங்க பண்ணினார். இதனை பின்வரும் வசனங்களில் காணலாம் "பன்னிரண்டு மாதம் சென்றபின்பு, ராஜா பாபிலோன் ராஜ்யத்தின் அரமனைமேல் உலாவிக்கொண்டிருக்கும்போது: இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப்பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான். இந்த வார்த்தை ராஜாவின் வாயில் இருக்கும்போதே, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரே, ராஜ்யபாரம் உன்னைவிட்டு நீங்கிற்று. மனுஷரினின்று தள்ளப்படுவாய்; வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பாய்; மாடுகளைப்போல் புல்லை மேய்வாய்; இப்படியே உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறாரென்பதை நீ அறிந்துகொள்ளுமட்டும் ஏழு காலங்கள் உன்மேல் கடந்துபோகும் என்று உனக்குச் சொல்லப்படுகிறது என்று விளம்பினது" தானி (4:29-32).

தேவன் இவ்வாறு தமது வல்லமையை வெளிப்படுத்தியிருந்தும் தேவனுக்கு எதிர்த்து நின்ற பெல்ஷாத்சார் என்னும் நேபுகாத்நேச்சார் குமாரனின் ஆளுகைக்கு ஒரே இரவில் தேவன் முடிவுண்டாக்கினார். இதனை நாம் தானி 5:22-28,30 வசனங்களில் காணலாம் "அவருடைய குமாரனாகிய பெல்ஷாத்சார் என்னும் நீரோவென்றால், இதையெல்லாம் அறிந்திருந்தும், உமது இருதயத்தைத் தாழ்த்தாமல், பரலோகத்தின் ஆண்டவருக்கு விரோதமாக உம்மை உயர்த்தினீர்; அவருடைய ஆலயத்தின் பாத்திரங்களை உமக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்; நீரும், உம்முடைய பிரபுக்களும், உம்முடைய மனைவிகளும், உம்முடைய வைப்பாட்டிகளும் அவைகளில் திராட்சரசம் குடித்தீர்கள்; இதுவுமன்றி, தம்முடைய கையில் உமது சுவாசத்தை வைத்திருக்கிறவரும், உமது வழிகளுக்கு எல்லாம் அதிகாரியுமாகிய தேவனை நீர் மகிமைப்படுத்தாமல் காணாமலும் கேளாமலும் உணராமலும் இருக்கிற வெள்ளியும் பொன்னும் வெண்கலமும்

**இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தீர். அப்பொழுது அந்தக் கையுறுப்பு அவரால் அனுப்பப்பட்டு, இந்த எழுத்து எழுதப்பட்டது. எழுதப்பட்ட எழுத்து என்னவென்றால்: மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின் என்பதே. இந்த வசனத்தின் அர்த்தமாவது: மெனே என்பதற்கு, தேவன் உன் ராஜ்யத்தை மட்டிட்டு, அதற்கு முடிவுண்டாக்கினார் என்றும், தெக்கேல் என்பதற்கு, நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய் என்றும், பெரேஸ் என்பதற்கு, உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு, மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது என்றும் அர்த்தமாம் என்றான். அன்று இராத்திரியிலே கல்தேயரின் ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலைசெய்யப்பட்டான்".**

மேற்கண்ட வசனங்களின் மூலம் நாம் கற்றுகொள்ளும் சத்தியம் என்னவென்றால் தேவனே சகலத்தையும் ஆண்டு நடத்துகிறவர் என்பதையும், தேவ பிள்ளைகளை இவ்வுலக அதிகாரங்கள் ஒன்றும் செய்ய முடியாது என்றும், தேவனை எதிர்த்து நிற்கும் எந்த அதிகாரத்திற்கும் தேவன் முடிவுண்டாக்குவார் என்பதுமாகும். எனவே இப்பொழுதும் தேசத்தை யார் ஆள போகிறார்கள் என்று நமது இந்திய மக்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் இக்கட்டத்திலும், தேவபிள்ளைகளாகிய நாம் வேத சத்தியத்தின்படி அமைதியோடு தேவனையே சார்ந்திருப்போம். ஏனெனில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியடி **"பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது" (யோ 19:11).** ஆதலால் மனித அதிகாரங்களை நாம் சார்ந்துகொள்ளவோ அல்லது அதற்கு அடிமைபடவோ / பயப்படவோ தேவையில்லை. ஆமென், அல்லேலூயா.